விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 23 ஞாயிற்றுக்கிழமை (07.07.2002) தொலைபேசி 3378 ஒலி 200



சாரங்கா
நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-2480

## அரசு - புலிகள் பேச்சில் காலதாமதம்

# சமாதான முயற்சிகளுக்கு மக்கள் ஆதரவு குறைகிறது

## ஆய்வுகள் தரும் அதிர்ச்சித் தகவல்

(நமது நிருபர்)

**அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை காலம் கடந்து போவதால் மக்கள் மத்தியில் அதற்கான ஆதரவு குறைந்து வருகிறது.**

**"மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்" மேற்கொண்ட ஆய்வில் இருந்து இவ் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆட்சிமாற்றத்திற்கும், சமாதானத்திற்குமாக மக்கள் ஆணை அளித்திருந்த போதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சி அமைத்து 8 மாதங்களாகியும் அரசு முன்னெடுத்துள்ள சமாதான முயற்சியில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படாத நிலையில் ''மாற்றுக் கொள்கைகளுக்கான சமாதான நிலையம் இந்த ஆய்வினை நடத்தியுள்ளது''.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக அரசும், விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தத்திற்காக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினைச் செய்திருந்தன.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பமிடப்பட்டு 6மாதங்களையும் கடந்த நிலையில் சமாதானத்திற்கான மக்களின் ஆதரவு படிப்படியாகக் குறைந்து வருகிறது என் ஆய்வு நிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேற்படி ஆய்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கால இடை

(02ம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நினைவு தினத்தில் தலைவர்பிரபா அஞ்சலிசெலுத்தினார்

(வவுனியா)

முதல்கரும்புலி மாவீரன் கப்டன் மில்லர் வீரகாவியமான நேரமான இரவு 7மணி 50நிமிடத்திற்கு நேற்று முன்தினம் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் ஈகச்சுடர் ஏற்றி அனைத்துக் கரும்புலி மாவீரர்களுக்கும் வணக்கம் செலுத்தினார்.

தமிழீழத்தின் கடல்,தரை மற்றும் நிழல் கரும்புலிகள் ஒன்று சேர தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் வன்னிப்பிரதேசத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஓர் இடத்தில் அனைத்துக் கரும்புலிகளின் திருவுருவப் படங்களும், நிழல கரும்புலி மாவீரர்களின் பொதுப்படமும் வைக்கப்பட்ட இடத்தில் சரியாக 7.50க்கு பொதுச் சுடரை ஏற்றினார்.

பல நூற்றுக்கணக்கான கரும்புலி வீரர்கள், தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகள், இளநிலைத்தளபதிகள், போராளிகள், மற்றும் கலைஞர்கள் மக்கள் எனப் பலரும் அணிவகுத்து புடைசூழ்ந்து

(02ம் பக்கம் பார்க்க)

வாசகர்களே:-
நாளை திங்கட்கிழமை
வலம்புரியின்
வாரமலர்
சங்கு நாதம்
தவறாது வாங்கிப் படியுங்கள

## ஈ.பி.டி.பி துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாட்டை விமர்சிக்கும் வகையில் ஓரணியாய் திரள்வோம் எனும் தலைப்பில் யாழ்மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பினர் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர். (இ)

## சமாதானத்தை வலியுறுத்தும் பிரதமர் ரணிலின் உரை

### தமிழ் தலைவர்கள் கருத்து

(கொழும்பு)

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெற்றுவரும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு சமாதானம் காணப்படவேண்டியதன் அவசியத்தையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை எடுத்துக்காட்டுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார நிலை பற்றியும், நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த 4ம் திகதி தொலைக்காட்சி மூலம் உரையாற்றி இருந்தார்.

பிரதமரின் அந்த உரை பற்றி தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களான யோசப் பரராஜசிங்கம் எம்.பி, கலாநிதி என். குமரகுருபரன்,

(08ம் பக்கம் பார்க்க)

## எரிபொருளின் விலை நாளை முதல் குறைப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை நாளை திங்கட்கிழமை முதல் குறைப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐ.தே.முன்னணி அரசு பதவியேற்ற ஏழு மாத காலத்துக்குள் மூன்று தடவைகள் எரிபொருட்களின் விலைகளைக் கூட்டியிருந்தது.

இந்நிலையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை எதிர்த்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வந்தமையை அடுத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு அரசு எடுத்துவரும் ஒரு நடவடிக்கையாகவே இந்த எரிபொருளின் வீலை குறைப்பு இடம் பெற்றுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள்

(08ம் பக்கம் பார்க்க)

புலி மாவீரர்களுக்கும் வணக்கம் செலுத்தினார்.

நிழல கரும்புலி மாவீரர்களின் பொதுப்படமும் வைக்கப்பட்ட இடத்

பலரும் அணிவகுத்து புடைசூழந்து

(02ம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சியில் புதிய காவலரண்கள் பாதுகாப்பை பலப்படுத்துவதில் படையினர்

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் பகுதியில் அமைந்துள்ள பிரதான இராணுவ முன்னரங்கக் காவலரண் பகுதியில் பாரிய இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

புதிதாக அமைக்கப்பட்டு வரும் இக் காவலரண் எழுதுமட்டுவாள் பகுதியில் தற்போது அமைந்துள்ள காவலரணுக்கு பின்புறமாக அரை மைல் தொலைவில் அமைக்கப்பட்டு வருகிறது.

தொடரான அகழிகளுடன் முக்கோண வடிவில் மிகப்பலமானதாக அமைக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை முகமாலையில் இருந்து மிருசுவில் வரையான இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள இராணுவத்தினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி

(08ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் சந்திரசேகரன் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஜே.வி.பி கொண்டுவரும்

(கொழும்பு)

அமைச்சர் பொ.சந்திரசேகரன் மீது ஜே.வி.பிபாராளுமன்றில் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான முன்னறிவித்தலை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளது.

அமைச்சர் பொ.சந்திரசேகரன் தமிழீழ விடுதலைப்புலிகளினால் நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதனால் இலங்கையின் அரசியல் அமைப்பை மீறியுள்ளார் எனவும் இதனால் அவர் பதவி விலக வேண்டும் என்றும் அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# புதிய தேர்தல் சட்டதிருத்தத்தை ஆதரிப்பதா? எதிர்ப்பதா?

## கூட்டமைப்பிற்குள் கருத்து முரண்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு விரைவில் கொண்டுவரவுள்ள தேர்தல் முறை சம்பந்தமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள சட்டமூலத்தை எதிர்த்து தமிழ்கட்சிக் கூட்டமைப்பில் கருத்து முரண்பாடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்கட்சிக் கூட்டமைப்பில் நிலவும் கருத்து முரண்பாடுகளைப் போல் ஏனைய தமிழ்கட்சிகளுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் புதிய தேர்தல் முறை மூலம் 125 அங்கத்தவர்களை தொகுதிவாரியாகவும், 100 அங்கத்தவர்களை விகிதாசார முறைப்படி தெரிவு செய்யக்கூடிய வகையில் கூட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வரவுள்ளது.

அரசு கொண்டுவரவுள்ள தேர்தல் மாற்ற முறையை தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியும் ஆதரிக்கும் அதேவேளை, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளை அகில இலங்கைத் தமிழ்காங்கிரசும்,

(02ம் பக்கம் பார்க்க)

# படையினரின் அத்துமீறலை கண்டித்து வவுனியாவில் நாளை பகிஷ்கரிப்பு

## வாகனப் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிக்கும்

(வவுனியா)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின்பும் இராணுவத்தின அத்துமீறல் சம்பவங்களை கண்டித்து நாளை திங்கட்கிழமை பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை வவுனியா மாவட்டப் போக்குவரத்து ஒன்றியம் நடத்தவுள்ளது.

ஒன்பது அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படவுள்ள இப் பகிஷகரிப்புப் போராட்டத்தை அடுத்து அன்றைய தினம் இ.போ.ச பஸ்கள், தனியார் பேருந்துகள், ஆட்டோக்கள் லொறிகள் என்பன சேவையில் ஈடுபடமாட்டாது.

இப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை அடுத்து கண்டிவீதி, நெடுங்குளம் சந்தி, தாண்டிக்குளம், கோவிற்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களில் இருந்து கண்டனப்பேரணிகள் ஆரம்பித்து வவுனியா நகரசபை மைதானத்தை வந்தடைந்து அங்கு மாபெரும் கண்டனக் கூட்டமும் நடைபெறும்.(வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு1இல் இருந்து மேற்படிப்புவரை சிறந்தஆசிரியர்கள் வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன் ஆங்கிலத்தில் கூடியகவனமும் அனுமதிக்கு தலைமை ஆசிரியர் நவிச்னேஸ்வரன் ஆச்சாரி 426(302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்

(5651)

### வகுப்புகள்

O/L 2002 பரீட்சைமாணவர்களுக்கான மாலைவகுப்புகள் ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், தமிழ், வர்த்தகம்,சிறுதொகை தனித்தனி கவனம் சித்திபெறுவது உறுதி வண்ணைசிவன் கோவில் அருகில் 426(302) காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்.

(5492)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள் (Prima Hijira Green Valley) சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 25.7.2002 வியாழக்கிழமை மாலை பெற்றுக் கொளளலாம் முன்கூட்டி பதிவு செய்யவும்.

தனபாலசிங்கம், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(5643)

## இராசி பலன்

07-07-2002

( ஆனி 23 ஞாயிறு)

துவாதசி பி. ப. 5–03 வரை
கார்த்திகை காலை 7-39வரை
இராகுகாலம் 4-28 - 5-58
நலலநேரம் 8-58-10-28

**மேடம்**
அதிகாரம், உடற் சுகம், சென்ற இடத்தில் சிறப்பு, உஷ்ணம

**இடபம்**
முயற்சி தாமதம், உறவினா சந்திபபு, பணவரவு, நல்ல செய்தி

**மிதுனம்**
உடல் நலக் குறைவு, தூர தேசபயணம், ஆலயதரிசனம்

**கடகம்**
உடல் உபாதை, காரிய சித்தி, இனசனக்கொண்டாட்டம, போசன சுகம்

**சிங்கம்**
காரியசித்தி, மனமகிழ்ச்சி, பணவிரயம, உஷ்ணம்

**கன்னி**
கௌரவம், பொருள்வரவு, கற்பனை மிகுதி, சயன சுகக் குறைவு

**துலாம்**
குடும்பக்கவலை, பெரியோர் ஆதரவு, மாதர்நட்பு, தெய்ய சிந்தை

**விருச்சிகம்**
புததிரரால் கவலை, விருந்தினர் வருகை, மனக்கிலேசம் பகைவரால் உதவி

**தனுசு**
கூட்டு முயற்சி, ஆரோக்கியம், காரிய வெற்றி, பணவரவு

**மகரம**
காரிய அலைச்சல், குடும்ப சுகம், தொழில் நன்மை சுவாரஸ்யம

**கும்பம்**
நினைத்த காரியம்கைகூடும் ரோகபயம,உடல் வியாதி, நண்பர்கள சந்திப்பு

**மீனம்**
அதிக பிரயாசை, அந்நியர் உதவி, காரிய தடங்கல், மனச்சஞ்சலம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# கரும்புலிகளை தமிழீழ தேசம் என்றுமே மறக்கமாட்டாது

### புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நெடுமாறன்

(வவுனியா)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் காலை ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வின்போது போராளிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என பெரும் திரளானவர்கள் கலந்து கொண்டனர்.

பொதுச்சுடரினை மாவீரர் பணிமனையினைச் சேர்ந்த றமேஸ்யப்பா ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றி வைத்தார். மாவீரர் பணிமனை மகளிர் பிரிவைச் சேர்ந்த அர்ச்சுனா கரும்புலிகளுக்கான சுடரை ஏற்றி வைக்க மாவீரர் மேஜர் ஜீவாவின் தந்தை மலர் வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து போராளிகளும் பொதுமக்களும் செலுதினார்கள். விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த 17500 மாவீரர்களுக்கும் 60ஆயிரம் பொது மக்களுக்குமான அகவணக்கமும் செலுத்தப்பட்டது. அரசியல் துறையைச் சேர்ந்த நெடுமாறன் தலைமையில் இந்தவைபவம்நடைபெற்றது. நெடுமாறன் தனது உரையில் குறிப்பிட்டதாவது;

வடக்கு கிழக்கு சகலமாவட்டங்களிலும் முதல் தடவையாக இந்தகரும்புலிகள் தினம் கொண்டாடப்படுகின்றது. கரும்புலிகளுடைய தியாகங்களையும் அவர்கள் விட்டுச் சென்ற பாதையில் நாங்கள் இப்போது சமாதான வழியில் சென்று கொண்டு இருக்கின்றோம். போராளிகளுடைய தியாகங்களினால் தான் இன்றைய சமாதான சூழல் ஏற்பட்டுள்ளது. கடந்தகாலத்தில் எதிரிகளுடைய தடைகளை உடைத்துக் கொண்டு ஏனைய அணிகளுக்கு சமருக்கு வழிஏற்படுத்திக் கொடுத்தவர்கள். கரும்புலிகள் அவர்களை எங்களுடைய தேசம் என்றுமே மறக்கமாட்டாது என்றார்.

இந்தவைபவத்தில்வவுனியா மாவட்ட அரசியல் துறை பொப்பாளர் ரி.மேலவன், வவுனியா மாவட்ட மகளிர்அரசியல்துறைபொறுப்பாளர் சி. அலை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வவுனியா கிளைத் தலைவர் கே. செந்தில்நாதன். வர்த்தக சங்க செயலாளர் எஸ்.தேவராசா உட்பட பொது அமைப்புக்களுடைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(வ)

**கரும்புலி**

நிற்க அமைதியான அந்த வேளை உணர்வுபூர்வமான இசைகளும் அறிவிப்புகளும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்க அந்தச் சந்தர்ப்பத்தில் சரியான நேரம் வரை காத்திருந்து தமிழீழத் தேசியத் தலைவர் பொதுச் சுடரினை ஏற்றினார்.

தொடர்ந்து முதலாவது கரும்புலி மாவீரன் கப்டன் மில்லரின் திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். அதன் பின் அனைத்துக் கரும்புலிகளின் திரு உருவப் படங்களுக்கு ஈகச் சுடர் ஏற்றி மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கீரன் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்ந்தன கீரனின் தலைமையுரையைத் தொடர்ந்து நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதனின் நெறிப்படுத்தலில் கரும்புலிகள் பாகம் இரண்டு கடற்கரும்புலிகள் பாகம் ஐந்து ஆகிய பாடல் இசைத் தட்டுக்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் உருவாக்கப்பட்ட கரும்புலிகள் பாகம் இரண்டு இசைத் தட்டை கலை பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர்.கவிஞர் புதுவை இரத்தினதுரையும்,

கடல் கரும்புலிகள் பாகம் ஐந்து இசைத்தட்டை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சேணல் சூசையும் வெளியிட்டு வைக்க அவற்றை தமிழ்த் தேகியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கலை பண்பாட்டுக் கழகத்தில் கரும்புலிகள் பாகம் இரண்டு இசைத்தட்டுக்கு உழைத்த கலைஞர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த இசைத் தட்டுக்கான பாடல்களை மூத்த தளபதி பொட்டுஅம்மான் மற்றும் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் எழுதியுள்ளனர்.

அடுத்து கடற்கரும்லிகள் பாகம் ஐந்து இசைத்தட்டுக்கான பாடல்களை கவிஞர் பொன் கணேசமூர்த்தி, பண்டிதர் க. வே. பஞ்சாட்சரம் கவிஞர் நாவண்ணன் மற்றும் செம்பருதி ஆகியோர் எழுதியுள்ளனர். இந்த இசைத்தட்டுக்கான பாடல்களுக்கு ஜெர்மன்எஸ்.கண்ணன் இசை அமைத்துள்ளார்

இந்த இசைத்தட்டு ஜேர்மனியில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. தமிழீழத்தில் நடைபெற்ற மாவட்ட நிகழ்வுகளிலும் கரும்புலிகள் பாகம் இாண்டு இசைத்தட்டுகள் வெளியிட்டு வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கலந்துகொண்ட கரும்புலிகள்நாள் நிகழ்வுகளின் இறுதியில் தமிழீழ இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்று தொடர்ந்து போராளி கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ)

# பாடசாலைகளில் இருந்து இராணுவம் வெளியேறக்கோரி கண்டனப்பேரணி

(வவுனியா)

பாடசாலைகளிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்துஆசிரியர்களும், மாணவர்களும் உட்பட்ட கல்விச் சமுகம் எதிர்வரும் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியாவில் மாபெரும் எழுச்சி பேரணியினை நடத்தவுள்ளனர்.

அரசுக்கும விடுதலைப்புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்த பிரகாரம் பாடசாலைகளிலிருந்து பாதுகாப்புப்படையினர் வெளியேறவேண்டும் ஆனால் இன்னமும் பாடசாலைகளிலும் அதற்கு சமீபமாகவும் படையினர் நிலைகொண்டுள்ளனர். இந்த கோரிக்கையினை முன்வைத்து எதிர்வரும் 9-ம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்திலிருந்து ஆரம்பிக்கும் கல்வி சமூகத்தின் எழுச்சி பேரணி மாவட்ட செயலகத்தில் முடிவடையும்.வைரவபுளியங்குளத்தில் உள்ள போர் நிறுத்த கண்காணிப்பு க்குழுவின் தலைவருக்கும் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடையபிரதிநிதிகளுக்கும்மகஜர்களை வவுனியா கல்வி சமூகம்கையளிக்கவுள்ளது.

இப்பேரணியில்சுமார் பத்தாயிரம் மாணவர்களும் ஆயிரம் ஆசிரியர்களும்கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (வ)

### உடற்பயிற்சி போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களுக்குமான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளையதினம் பி. ப 2.00 மணிக்குகோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19-6)

# ஜனாதிபதி தலைமையில் சு. க. கட்சி புனரமைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை மீள்புனரமைப்புச் செய்வதற்குரிய ஆரம்ப வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா அநுராதபுரம் செல்கிறார். கட்சிப் புனரமைப்புவேலைகள் இம்மாதம் 15ஆம் திகதி வரை நாடு தழுவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள ஜனாதிபதிவிடுதியில் இடம் பெறவுள்ள விசேட பூசை வழிபாடுகளுடன் கட்சி புனரமைப்பு வைபவத்தை ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இம்மாதம் 15ம் திகதிவரை நடைபெறவுள்ள கட்சிப் புனரமைப்பு வேலைகளில் ஜனாதிபதிசந்திரிகாஈடுபடவுள்ளார்.

நாளை சிலாபம் செல்லும் ஜனாதிபதி அங்குள்ள முன்னேஸ்வர ஆலயத்தில் இடம் பெறும் விசேடபூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதுடன், நீர்கொழும்பிலுள்ள அங்குள்ளசென்.மேரிஸ் தேவாலயத்திற்குச் சென்று வழிபாடுகளை நடத்தியபின் கட்சியின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

(உ- 8)

# பணயக் கைதிகள் 18 பேர் விடுதலை

(யகார்த்தா)

இந்தோனேசியாவின் ஆஜ் மாகாணத்தில் தீவிரவாதிகளால் ஒரு மாத காலமாக பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 18 பொது மக்களும நேற்று விடுதலை செய்யபபட்டனர்.

ஆஜ் விடுதலை இயக்கத்தினரை பயங்கரவாத இயக்கம் என்று அரசாங்கம் பட்டியலிட்டதை தொடர்ந்தே இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தீவிர விசாரணைகளை அடுத்து இரு கட்டங்களாக நேற்று முன்தினமும் நேற்றும் விடுதலை செய்யப்பட்டனர் என ஆஜ் மாகாணத்துக்குபொறுப்பான இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார் (உ-8)

# ஆயுதப் பரிசோதனை ஈராக்கின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமுமில்லை

(பக்தாக்)

ஆயுதப் பரிசோதனைகளை நடத்துவதற்கான ஐக்கிய நாடுகளின் திட்டத்திற்கு ஈராக் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

வியன்னாவில் கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்ற ஆயுதபரிசோதனைகள் தொடர்பான பேச்சுவார்த்தையின் போது ஈராக் எந்தவிதமான உடன்பாட்டுக்கும் வர மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆயுத பரிசோதனையை ஈராக்கில்நடத்துவதற்கு அனுமதி வழங்கினால் அது அமெரிக்காவுக்கு அனுகூலமாக அமைந்துவிடும் என்று அரபுத் தலைவர்கள் கூறியுள்ளனர்.

இதனை தந்திரமாக தீர்த்து வைக்க வேண்டும் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-8)

### புதிய தேர்தல்-

ரெலோவும் எதிர்க்கின்றன.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத புளொட் அமைப்பும்அரசின் புதியதேர்தல் முறையை எதிர்ப்பதாகஅதன் தலைவர் த. சித்தார்த்தன் எம். பி. அறிவித்துள்ளார்.

அரசில் அங்கம் வகிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையகத் தமிழ்மக்களின் பிரதிநிதித்துவம் குறையாத வகையில் சட்டமூலத்தில் திருத்தஞ் செய்யப்பட்டால் அதனை ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் தமிழர் தேசியக் கூட்டமைப்பில் இத்தேர்தல்சட்ட மூலம் தொடர்பாக ஏற்பட்டுளள கருத்து முரண்பாடுகளைப் போக்குவதற்கு நாளை மறுதினம் செய்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள தமிழர்விடுதலைக்கூட்டணிக் காரியாலய தில் கூட்டமைப்பினர் கூடி ஆராயவுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க புதிய தேர்தல் முறை சம்பந்தமாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சித் தலைவர்களையும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா எதிர்

### சமாதான முயற்சிகள்

வெளி நீடித்துச் செல்வதால் சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களின் தொகைஅதிகரித்து வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை காலம் தாழ்த்தாது உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று ஆய்வு அறிக்கை குறித்து அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

வரும் 10 ம் திகதி புதன் கிழமை சந்தித்துப் பேசவுள்ளார். (வ)

# முத்தையா பாகவதர் இசைமேதையாக விளங்கி பலமொழிகளில் இராகங்களை வகுத்துள்ளார்

மு. கடம்பநாதன் எம். ஏ.

(இசை)

இவர் 1877 நவம்பர் 15 ஆம் தேதி ராஜபாளயம் அருகிலுள்ள புனல்வேலி என்ற கிராமத்தில் லிங்கமய்யர் ஆனந்த வல்லியம்மாள் தம்பதிகளுக்குகுமாரனாகப் பிறந்தார். இவருடைய தந்தையார் இவருக்கு 7 ஆவது வயதில் காலமானார். இதன் பிறகு தாய்மாமன் வீட்டிற்கு திருநெல்வேலி ஜில்லா ஹரிசேச நல்லூர் கிராமத்தில் குடியேறினார். 9 வது வயதில் கல்விகற்க திருவையாறு சென்று தியாகராஜஸ்வாமிகள் சிஷ்யரான பிடில் வித்வான் ஸாம்பசிவசிவன் அவர்களிடம் இசையைப் பயின்றார். இத்துடன் மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஸமஸ்க்கிருதம் முதலிய பாஷைகளையும் கற்றார். அதே சமயத்தில் வேத அத்யயனமும் கற்றார். தனது 19 வது வயதில் கல்வியைப் பூர்த்தி செய்து கொண்டு ஹரிகேச நல்லூர் வந்தார். உடன் திருவனந்தபுரம் சென்று மூலம் திருனாள் மஹாராஜாவிடம் கச்சேரி செய்து 1000 ரூபாய் அட்டத்தோடா, வீரசங்கிலி ஸன்மானம் செய்து கௌரவிக்கப் பட்டார். 22 வயதில் அத்தான் மகளாகிய சிவகாமியம்மாளை மணந்து கொண்டார். 24 வது வயதில் ஆண்டிபட்டி வந்தார். ஸ்ரீ பெத்தாச்சி செட்டியாரால் கௌரவிக்கப்பட்டு ஆப்த நண்பர்களானார்கள். பின்னர் ஸ்கந்தஷஷ்டி உத்ஸவத்தை வெகுவிமரிசையாக நடத்தி அனேக வித்வான்களைக் கொண்டு கச்சேரி செய்வித்து மகிழ்ந்தார். மராடி ஸம்ப்ரதாயத்தை யனுஸரித்து கதை செய்ய க்ருஷ்ண பட்ஜி என்ற மராட்டி ஸங்கீத வித்வானை வரவழைத்துமராட்டி கற்றுக் கொண்டு ஸாசி, திண்டி, என்ற புதுமுறை ஏற்படுத்தி ஹரிகதையில் புகுத்தினார். இவர் ஹரிகதையில் மிகவும் புகழ்வாய்ந்தது வள்ளி கல்யாணம், ஸதிஸுலோசனா, கௌசல்யா கல்யாணம், துர்வாஸபிஷை, துரௌபதி மாஸைம்ரக்ஷணம், தியாகராஜ சரித்திரம். பாடல்கள் பல இயற்றினார்

1927 ல் மைசூர் மஹாராஜா கிருஷ்ணராஜரிடம் கச்சேரிசெய்து மைசூர் ஆஸ்தான வித்வானானார். மைசூர்மஹாராஜாவின் அனுமதியின்பேரில் ஸ்ரீ சாமுண்டாம் பாஷ்டோத்தரக் கீர்த்தனைகளைக் கன்னடமொழியில் இயற்றினார் பிறகு சிவாஷ்டோத்தரக் கீர்த்தனைகளையும், நவக்ரஹ கீர்த்தனைகளையும் சமஸ்கிருத பாஷையில்இயற்றினார்இவற்றைத் தவிர ஆதி, அடதாளங்களில்தானவர்ணங்களும், பதவர்ணமும், தருவர்ணங்கள் ராகமாளிகைகள், தலா ஆவர்ணராகமாளிகைகள், தில்லானாக்கள் முதலியவைகளும் இயற்றினார், அநேக தெய்வங்களின் பெயர்களில் தமிழ், கன்னடம் தெலுங்கு, ஸமஸ்கிருதம்முதலிய பாஷைகளில் பாடல்கள் இயற்றியுள்ளார். 1932 இல் சென்னை மியூசிக் அகாடமியில் அதிபராகப் பணியாற்றினார். அகாடமியரால் சங்கீதகலாநிதிஎன்ற பட்டம் வழங்கப்பட்டது. பல மொழி ராகங்கள் வகுத்தார்

1936 இல் திருவனந்தபுரம் மஹாராஜா அவர்களால் அழைக்கப்பட்டு ஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களின் பாட்டுக்களை பிரசாரம் செய்யவும், இதற்காக ஸ்வாதி திருநாள் சங்கீத கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு அதிபராகவும் நியமிக்கப்பட்டார். 1941 இல் சங்கீத கல்பத்ருமம் எனும் சங்கீதசலக்ஷிண நூல் எழுதினார். இதற்காக திருவாங்கூர் பல்கலைகழகத்தால் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டார். 1945 ஜுன் 30 ல் காலமானார். இவரின் முக்கிய மாணவர்கள் பிடில் அப்பாவையர் எம் சங்கரநாராயணைஐயர், சங்கர சிவம், மதுரை மணியஐயர், கே. ஏ. ஸ்ரீனிவாஸன், என். வி. நாராயணைஐயர், பிடில் ஏ. வெங்கடிச்வரஐயர். கோட்டுவாத்தியம் ஏ. நாராயணைஐயர், வீணை சுப்பிரமணியஐயர், நெல்லை T. V. கிருஷ்ணமூர்த்தி இவரால் கண்டுபிடிக்கப்பட்ட அபூர்வராகங்கள் வருமாறு விஜயஸரஸ்வதி ஹம்ஸகமனி, சுர்ணாஞ்ஜனி, பசுபதிப்ரியா, புதமனோஹரி, சுமனப்ரியா, குஹரஞ்ஜனி, ஹம்ஸதீபகம், கோகிலபாஷினி, அலங்காரி, வலஜி, ஸாரங்கமல்ஹார், கௌடமல்ஹார், ஹம்ஸானந்தி, நீரோஷ்டா, மாயாப்ரதீபம், ஹரிநாராயணி, நாகபூஸணி, வீணாதரி, சக்ரப்ரதீப்தா விஜயநாகரி, ஊர்மிகா, குருப்ரியா முதலியவைகளாகும்.

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆலய தேர்தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-8)

## படையினர் அச்சுறுத்தல்

(திருநெல்வேலி)

வடமராட்சி சுப்பர்மடம் சந்தியில் நேற்றுக் காலை கரும்புலிகள் தினத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டித்துக் கொண்டிருந்த பொது மக்களைப் படையினர் அச்சுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-43)

## பயிற்சியும் பரீட்சையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைக் கல்வி நடுநிலையத்தில் நேற்று முதல் யாழ். ஆலயப் பங்கு மட்ட மறைக்கல்வி ஆசிரியர் பயிற்சியும், பரீட்சையும் இடம்பெற்று வருகின்றது.

3 தினங்கள் இடம்பெறவுள்ள இந்தப்பயிற்சியில் ஆலய பங்கு மட்ட மறைக் கல்வி ஆசிரியர்கள் பங்பற்றி பயனடையலாம் என யாழ். மறைக் கல்வி நடுநிலையம் தெரிவித்துள்ளது. (உ-19-6)

## மலேரியா நோயாளியின் மரணத்தில் மர்மம்

(கொழும்பு)

தப்பிச்சென்ற மலேரியா நோயாளி, சிலமணி நேரத்தில் மர்மமான முறையில் மரணமானார்.

கண்டி பேராதனை வைத்தியசாலையில் மலேரியா நோய்க்குச் சிகிச்சைபெற்று வந்த ஒருவர் வைத்தியரின் அனுமதியின்றி தப்பிச் சென்றதாகவும்,

பின்னர், அங்கு நின்ற வாகன சாரதியின் கையைக் கடித்தும் குழப்பங்களை விளைவிக்வும் முயன்றபோது பொலிஸார் பொதுமக்களின் உதவியுடன் அவரைப் பிடித்து மீண்டும் வைத்தியசாலையில் அனுமதித்த சிறிது நேரத்தில் பிரஸ்தாப நபர் மரணமடைந்துள்ளார்.

இவர் கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வாணி பத்துறைப் பரிசோதகராக கடமையாற்றுவதாகவும், மரணத்தில் சந்தேகமிருப்பதால் விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## மாதாந்தம் 2 ஆயிரம் குற்றச் செயல்கள்

(கொழும்பு)

நாடு பூராகவும் மாதாந்தம் இரண்டாயிரம் குற்றச்செயல்கள் நடைபெறுவதோடு நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதங்கள் மீட்கப்படுவதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார். (உ-3)

## மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் நாவலர் சனசமுக நிலைய நாவலர் பாடசாலை மெய்வல்லுநர் போட்டியும் நிலைய அங்கத்தவர்களிற்கான மெய்வல்லுநர் போட்டியும் இன்று பி. ப. 2. 30 மணிக்கு நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதேச செயலர் கே. சந்திரராசா கலந்துகொள்ளவுள்ளார். (உ-3)

# பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் 31 ஆம் திகதி இலங்கை வருகிறார்

## முக்கிய தரப்புகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் எதிர்வரும் 31 ஆம் திகதி மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வரவுள்ள முஷாரப், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்காவையும் முக்கிய அரசியல் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடனான கலந்துரையாடலின் போது சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாகவே முக்கியமாக ஆராயப் படவுள்ளது.

இதற்கிடையே இம் மாத நடுப்பகுதியில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும், இறுதிப் பகுதியில் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணா நாயக்காவும் பாகிஸ்தான் செல்லவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஜனாதிபதி முஷாரப்பின் விஜயத்துக்கு முன்னதாக பாகிஸ்தானின் இரு அமைச்சர்கள் அடுத்த வாரமளவில் இலங்கை வரவுள்ளனர். (உ-8)

# விடுதலைப்புலிகளின் விசேட மாநாடு கிளிநொச்சியில் இரு தினங்கள்

(கிளிநொச்சி)

எதிர்வரும் செவ்வாய், புதன் கிழமைகளில் விசேட மாநாடு ஒன்று விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

அரசு- புலிகளிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் அதன் பின்னரான சமாதான முன்னெடுப்புக்கள் பற்றியதான தற்போதைய நிலைப்பாட்டை விளக்கும் வகையிலேயே இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் கலந்துகொள்வதற்கு சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும்,

புலிகள் தரப்பில் முக்கியஸ்தர்கள் பலரும் இதில் கலந்து கொள்ளவிருப்பதாகவும் தெரியவருகிறது. (உ)

## தம்மீதான குற்றச்சாட்டுகள் பற்றி

# விரிவாக பேச வருமாறு ஜே.வி.பி உள்துறை அமைச்சருக்கு அழைப்பு

(கொழும்பு)

நாட்டில் பெருகிவரும் குற்றச் செயல்களுடன் தம்மை தேவையற்று தொடர்புபடுத்த வேண்டாம் எனவும்,

இது குறித்து தம்முடன் நேரடியாகப் பேசி விளக்கமளிக்க பொலிஸ் மாஅதிபர் பொலிஸ் திணைக்களமும் முன்வர வேண்டும் எனவும் ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

நர்ட்டில் பெருகி வரும்குற்றச் செயல்களை ஜே.வி.பி. ஊக்குவித்து வருவதாகவும் இதற்கான ஆதாரங்களை சி.ஐ.டியினர் கண்டறிந்திருப்பதாகவும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸ்மாஅதிபர்ஆகியோர் கூறிவருவது குறித்து விடுத்த மறுப்பறிக்கையிலேயே ஜே.வி.பி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எம் மீது சுமத்தப்படும் போலிக் குற்றச் சாட்டுக்களை ஐ.தே.மு. அரசு உடனடியாகநிருபிக்க வேண்டும்.

1983ஆம் ஆண்டு யூலைக் கலவரங்களைத்தூண்டிவிட்ட அப்போதைய ஐ.தே.க. அரசு பின்னர் இடதுசாரிகள் மீது அப் பழியைப் போட்டதுடன் எம்மையும் தடை செய்தது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## ஆங்கில படிப்புகள் வட்ட மாதாந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணஆங்கில படிப்புகள் வட்டத்தின் மாதாந்த கருத்தரங்கு நாளை பி. ப. 3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

''இந்திய ஐரோப்பிய மொழிக்குழுக்களின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, வேறுபாடுகள் (Indo-European LanguageGroup-Origin, development and structural Differences) எனும் தலைப்பில் ஆர்னி எக்கனும் (Arne EGGEN)

ஆங்கில இலக்கியம் விளங்கிக் கொள்ளுதல் (Understanding unseen Literature)எனும் தலைப்பில் கவிஞர் எஸ். பத்மநாதனும் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஷ)

## சந்திரிகா பொறுப்பற்றுச் செயற்படுகிறார்:

# அனுராவின் புதிய பதவி குறித்து அமைச்சர் மகேஸ்வரன் விமர்சனம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் தேசியஒருங்கிணைப்புத் துறையின் சிரேஷ்ட ஆலோசகராக அனுரா பண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளமையானது ஒரு பொறுப்பற்ற செயல் என இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் விமர்சித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டில் உண்மையான அக்கறையை அனுரா கொண்டிருந்தால், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானமுயற்சிகளுக்கு எதிராகப் பகிரங்கமாகச் செயற்படும் அரசியல் சக்திகளை விலக்கிக்கொள்ள வேண்டும்.

அத்துடன், பிரதமரின் தற்போதைய முயற்சிகளுக்கு ஆதரவாகச் செயற்படவும் தயாராக வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர்,

நாட்டின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலைக்குப் பொறுப்பானவர்கள் என்ற வகையில், ஜனாதிபதி சந்திரிகாவும், அனுரா பண்டாரநாயக்காவும் இது குறித்த பகிரங்க விவாதத்திற்கு முன்வருவார்களா? எனவும் வினாத்தொடுத்துள்ளார். (உ-8)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உரிய முறையில் அமுலாக்க கூட்டமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவினாலும் தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உரிய முறையில் அமுலாக்குமாறு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தினவைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதேகே.ஆர்.குகனேஸ்வரன், சிவசக்திஆனந்தன், ந. ரவிராஜ்,அ விநாயகமூர்த்திஆகியோர்இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர். சி. அலை தலைமையில் நடைபெற்ற கரும்புலிகள் தினநிகழ்வில் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் மாகாண கல்விப்பணிப்பாளர்விசாகலிங்கம்வவுனியா மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் வி. எஸ். அப்துல்லா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (உ-8)

# பயங்கரவாதம் தொடர்பாக இலங்கை- ரஷ்யா ஒருமித்த கருத்து

சகல விதமான குற்றச் செயல்களும் பயங்கரவாதச் செயல்களே என்பதில் இலங்கையும், ரஷ்யாவும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் டிரோன்பெர்ணாண்டோவும், ரஷ்ய வெளிநாட்டமைச்சர் எகோர் எவனோவும் இணைந்து மொஸ்கோவில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பயங்கரவாதம், சர்வதேச அமைதிக்கும், பாதுகாப்புக்கு பாரதூரமான அச்சுறுத்தலை விடுக்கின்றது. என குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை தடுப்பதற்கும், ஒடுக்குவதற்குமான கூட்டு மற்றும் தனிப்பட்ட முயற்சிகளினை வலுப்படுத்துவதற்கான பாதுகாப்பு சபையின் தீர்மானத்திற்கு இவ்விரு அமைச்சர்களும் ஆதரவு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

### 250 கோடி

# நட்ட ஈடு கோருகிறார் அமைச்சர் ஆறுமுகம்

(கொழும்பு)

தன்மீது அவதூறு குற்றச் சாட்டுககளைச் சுமத்தியமைக்காக தலா 50 கோடி ரூபா நட்ட ஈடு வழங்க வேண்டுமென அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் 5 பத்திரிகை நிறுவனங்களைக் கோரியுள்ளார்.

பொரளை பொலிஸ் நிலையத்தில் கலாட்டா செய்ததாக தன்மீது தேவையற்ற குற்றச்சாட்டைச் சுமத்தி செய்திகளை வெளியிட்ட லக்பிம, திவயின, லங்காதீப ஆகிய சிங்களப் பத்திரிகை நிறுவனங்களையும் தஐலண்ட் டெய்லி மிரர் ஆகிய ஆங்கிலப் பத்திரிகை நிறுவனங்களையுமே நட்ட ஈடாக தலா 50 கோடி செலுத்த வேண்டும் எனவும்,

2வார காலத்தில் இதனைச் செய்யத் தவறுமிடத்து சட்ட நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் சட்டத்தரணி திருமதி த. கௌரி சங்கர் மூலமாககடிதம்அனுப்பியுள்ளார். (உ)

# பொலிஸ்ஆணைக்குழு அடுத்தமாதம்அமைப்பு

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அடுத்த மாத இறுதிக்குள் அமைக்கப்படும் என உள் துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை அமைப்பதன் மூலமே சிறந்த பொலிஸ் சேவையினை ஏற்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவும், குற்றவாளிகளை கைது செய்வதற்கும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உதவுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

### தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்படும்

# வறிய மக்களின் வாழ்விடத்தில் படையினர் முகாம் அமைப்பு

(திருநெல்வேலி)

வறிய மக்களுக்கென யு. என். எச். சி. ஆர். நிறுவனத்தின் உதவியுடன் வடமராட்சி தும்பளை கிழக்கில் அமைக்கப்படும் 40 வீட்டுத் திட்டப் பகுதியில்படையினர்முகாமிடுவதாக தெரியவருகின்றது.

மேற்படி வீட்டுத் திட்டமானது யு. என். எச். சி. ஆர். நிறுவனத்தின் குறிப்பிட்டளவு நிதியுதவியுடனும், பயனாளிகளின் பங்களிப்புடனும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத் திட்டம் முடிவுறும் தறுவாயில், திட்டத்தில், அடங்கும் 6 வீடுகளையும் பொது மக்கள் பாவனைக்கென அங்கு அமைக்கப்பட்ட நூல் நிலையத்தையும் உள்ளடக்கி படையினர் தற்போது முகாம் அமைத்து வருகின்றனர்.

இதனால் பாடுபட்ட மக்கள் எங்கே செல்வது என்று அறியாமல் கலங்கி நிற்கின்றனர்.

இது இவ்விதமிருக்க, அருகில் படையினர் நிலைகொண்டால், ஏனைய குடியிருப்பாளர்களின் இருப்பும் கேள்விக் குறியாகலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது. (த-43)

# இலங்கை- பாக். இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கையும் பாகிஸ்தானும் அடுத்தமாதமளவில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளன என வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விருநாடுகளிடையேயான சுதந்திர வர்த்தக ஒப்பந்தமான நகல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இம்மாத இறுதியினுள் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தானின் ஜனாதிபதி பெர்வேஷ்மு ஷாரப், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடனான சந்திப்பின் போது இது தொடர்பாக ஆராயவுள்ளார்எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

### நிமலராஜன் கொலை வழக்கு

# விசாரணை முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலராஜன்படுகொலை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலிஸாரின் விசாரணை முன்னேற்ற அறிக்கை யாழ்.நீதிமன்றத்தில் நீதிவான் இ.த. விக்னராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையினை அடுத்து யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா சந்தேகநபர்களான கே.ஜெகதீஸ்வரன்,பழனிச்சாமிவிஸ்வநாதன் ஆகியோரை இரண்டு வாரகாலத்துக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி, படுகொலை தாடர்பாக புலன்விசாரணையில், தேடப்பட்டுவரும் இன்னுமொரு சந்தேக நபர் கொழும்பு-5,பாக் வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி,பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமைக் காரியாலயத்தில் இருப்பதால் அவரைக் கைதுசெய்வதற்கான பிடியாணையை நீதிபதி பிறப்பித்தார்.

அத்துடன், நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று சுண்டுக்குழி றக்கா வீதியில் உள்ள ஜோண் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் உள்ள பொலிஸ் காவலரணில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரியின் வாக்கு மூலத்தையும்பதிவு செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (வ-6)


## பருத்தித்துறை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

படிவ விநியோகம் - 10.07.2002 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை
படிவம் ஏற்றல் - 11.07.2002 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை
படிவம் திறத்தல் - 11.07.2002 ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு

### அட்டவணை

| வேலைவிபரம் | மீளளிக்கக்கூடிய கேள்விவைப்பு | படிவக் கட்டணம் | பொ.சே.வரி |
|---|---|---|---|
| 1. குடத்தனை வடக்குமீனவர் இளைப்பாற்று மண்டபம் அமைத்தல் | 2300/- | 100/- | 12.50 |
| 2. குடத்தனை நெசவு நிலைய வீதி புனரமைப்பு | 2300/- | 100/- | 12.50 |
| 3. மருதங்கேணி வாரிவிட்டன் வீதி புனரமைப்பு | 1200/- | 100/- | 12.50 |

கேள்விகள் யாவும் அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையில் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு 'தலைவர்' பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமோ அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ குறித்த திகதியின் முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச்சபையின் முடிவேஇறுதியானதாகும். மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே. பி,யு,எம்

தலைவர்,
பருத்தித்துறை பிரதேசசபை.

பருத்தித்துறை பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,புலோலி,
02.07.2002.

(சி-4628)

# இன்று ஒரு தகவல்

## கட்டபொம்மனின் கண்ணீர்

கடைசிவரை தலைமைக்கு ஒப்புக்கொள்ளாமலிருந்த அறிஞர் அண்ணா வந்ததிலும், தலைமை ஏற்றதிலும், பாராட்டுரை தந்ததிலும் பெருமகிழ்வுகொண்ட சிவாஜிகணேசன் செயலற்று நின்றார். எப்படித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்வது என்று தெரியாமல் தவித்தார். அதுவரை கட்டபொம்மனாக வேடமேற்று முழக்கமிட்ட கணேசன் அவர்தானா என்று ஐயங்கொள்ளும்படி அமைதித் தோற்றத்தோடு காணப்பட்டார். நன்றிகூற வார்த்தைகள் வெளிவராமல் தடுமாறினார். தடுமாற்றத்தோடு ஆனந்தக் கண்ணீர் பொங்கிப் பெருகியது.

காஞ்சிபுரம் கூட்டத்திற்குப் போகாமல் பெருந்தன்மையோடு கட்டப்பொம்மன் நாடகம் பார்க்க அறிஞர் அண்ணா வந்ததில் அன்று கணேசனுக்கு மட்டிலா மகிழ்ச்சி ஏற்பட்டது. தலைமையுரையில் அண்ணா தெரிவித்த கருத்து, அந்த ஒரு சொல், 'எங்கிருந்தாலும் வாழ்க' பல பழைய நினைவுகளைத் தூண்டிவிட்டது. நாடகம் முடிந்ததும் அண்ணாவையும் அவரது நண்பர்களையும் இரவுச் சாப்பாட்டுக்குத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார் கணேசன். அப்பொழுது கணேசன் வீடு இராயப்பேட்டையில் சண்முகமுதலி தெருவில் இருந்தது. ஏற்கனவே அந்த வீடு கலைவாணர் கிருஷ்ணனுக்குச் சொந்தமாக இருந்தது. பல தடவைகள் அண்ணா அங்கு சென்றிருக்கிறார். கலைவாணரோடு உறவாடி, உரையாடியது உண்டு.

அந்த இல்லத்தைக் கணேசன் வாங்கிய பிறகு அண்ணா முதற்தடவையாக உள்ளே நுழைந்தார். கலைவாணரைப் பற்றிய பல நினைவுகள் மோதிக் கிளம்பின. பாடுபட்டு அடக்கிக்கொண்டு, கணேசனின் வேண்டுகோளைத் தட்டாமல் விருந்துண்டார். கணேசனின் 'கட்டபொம்மன்' நாடகத்தை அண்ணா பார்க்க மாட்டார், தலைமைக்கு ஒப்புதல் தரமாட்டார் என்றெல்லாம் சிலர் எண்ணினார்கள். காரணம் கணேசன் தி.மு. கழகத்திலிருந்து பிரிந்து காங்கிரஸில் தொடர்பு கொண்டிருந்தார். அதைக் காரணமாக அப்படிச் சிலர் நினைத்தார்கள். ஆனால்பெருந்தன்மையோடு சிவாஜி கணேசனின் நாடகம் காணச் சென்றார் அண்ணா. அதிலும் அவருடைய மாண்பு சுடர் விட்டது. ●

–நவீனன்

# பொ.ஐ.மு. ஆட்சிக் காலத்தில் ரப்பர் கூ.தாபனத்திற்கு வழங்கிய

# 541 மில்லியன் ரூபா மோசடி

(கொழும்பு)

கடந்தபொ.ஐ.மு.அரசாங்க ஆட்சியின் இறுதிக்கால கட்டத்தில் ரப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்குதிறை சேரியிலிருந்து வழங்கப்பட்ட பணத்தில் 541 மில்லியன் ரூபாவுக்கானகணக்குகள் காட்டப்படவில்லை அப்பணம்மோசடியானமுறையில் செலவு செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

சி.ஐ.டீ. பகுதியினரிடம் இதுதொடர்பான விசாரணையை ஒப்படைக்குமாறு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லை தான் கேட்டுக் கொள்ளவிருப்பதாக கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

மொத்தம் 900 மில்லியன் ரூபா கடந்த அரசாங்கத்தினால் பதவிக் காலம் முடியும் தறுவாயில் ரப்பர் உற்பத்திக்கு கூட்டுத்தாபனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டது.

ஆனால் அதிலிருந்து ரூபா 54கோடி 11லட்சத்து 67ஆயிரத்து 730 ரூபாவுக்கான கணக்குகள் கூட்டுத்தாபனத்தில் இல்லை. முன்னைய நிர்வாகத்தினால் இத்திகைய மோசடிசெய்யப்பட்டுள்ளது. ஒரேகொடுப்பனவு இரண்டு தடவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தவறான பேர்வழிகளுக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளது.மேலதிக கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. அங்கீகாரமற்ற கொடுப்பனவுகள் செய்யப்பட்டன மோசடியாக கணக்குகள் வைக்கப்பட்டன.

நியாயமற்ற கொடுப்பனவுகள்,இல்லாத ஆட்களுக்கு கொடுப்பனவுகள், பொருட்கள் கொள்வனவு செய்யப்படாமலே கொடுப்பனவுகள், கட்டப்படாத கட்டங்களுக்கு கொடுப்பனவுகள் ஆவணங்களின்றி கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன என்று பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல இது குறித்து தெரிவித்தார். அத்திபாரக் கல்நாட்டலுக்கான செலவாக 120 மில்லியன் காட்டப்பட்டுள்ளது.இரண்டு கிணறுகள் தோண்டுவதற்கு 2 இலட்சத்து 807 ஆயிரத்து 868 ரூபா கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும் ஒரு கிணறு தோண்டப்பட்டுள்ளது என கணக்காய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

## குற்றப்பணம் அறவீடு

(மந்திகை)

மட்டுவில் பகுதியில், சட்டவிரோதமாக மதுபானம் தயாரிப்பதற்கு 56 கிராம் கோடா வைத்திருந்த நபரை 20 ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்துமாறும், தவறின் 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ-23)

## சாவகச்சேரி இலங்கை வங்கி கிளை இயங்கும்

(நெல்லியடி)

அச்சுவேலியில் இயங்கிவரும் இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை, எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட் கிழமை முதல் சாவகச்சேரியில் இயங்கவுள்ளது. (உ-247)

## வினாடிவினா போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இன்ரரக்ட் கழகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பொது அறிவுவினாடி வினாப் போட்டி நாளை திங்கட் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஷ)

## அதிபர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர்கள் சங்க நிர்வாக சபைக் கூட்டம் இன்றுமு.ப. 10.00 மணிக்கு யாழ்.மத்தியகல்லூரியில்தலைவர் செ.சேதுராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## தலை சிதறிப் பலி

(ஏழாலை)

ஏழாலை சந்திக்கருகில் கடந்த வியாழன் பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - உழவு இயந்திர விபத்தில், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரான ஏழாலைவடக்கைச் சேர்ந்த க. இதயன்(வயது 30) என்பவர் தலைசிதறிப்பலியானார் (உ-206)

## தடயப் பொருட்கள் மீட்பு

(மந்திகை)

எரிந்த நிலையில் இருபெண்களின் சடலங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் வசமிருந்து தடயப் பொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மேற்படி நபர் அண்மையில் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது 18 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (உ-23)

# வழமை போல் வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம் களைகட்டுகிறது

(யாழ்ப்பாணம்)

மத்திய கல்லூரி மற்றும் பரியோவான் கல்லூரி ஆகியவற்றுக்கிடையே எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ள வடக்கின் மாபெரும் துடுப்பாட்டத்திற்கான முன் அறிவிப்பு நிகழ்வுகள் களைகட்ட ஆரம்பித்துள்ளன.

வழமை போன்று, மாணவர்கள் தத்தம் பாடசாலைக்கோ அன்றி தமக்குப் பிடித்தமான அணிக்கோ ஆதரவாக வீதிகளில் கூச்சலும் குழப்பமும் போட்டு வருகின்றனர்.

அத்துடன், பாடசாலைச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் செல்லும் மாணவ, மாணவியரும் இது குறித்த கோஷங்களை வீதிகளில் எழுப்பி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. (இ)

# பல்கலை மாணவர் பொலிஸார் மோதல்

(கொழும்பு)

பொலிஸாரின் உத்தரவையும் மீறிபேரணியாகச் செல்லவிருந்த மாணவர்களைத் தடுத்து நிறுத்தியபோது, பொலிஸாருக்கும், மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களின் போது 3 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முன்பாகப் புறப்பட்டு திறைசேரிவரை செல்லவிருந்த பல்கலைக் கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணியின் போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, திறைசேரியில் கையளிக்கப்படவிருந்த மகஜரையும் பொலிஸார் தீயிட்டெரித்ததாகவும் தெரியவந்துள்ளது. (உ)

# சர்வமத சம்மேளனம் சமாதானம் குறித்து மக்களிடம் வலியுறுத்து

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்களினால் நாட்டில் தற்போது முன்னெடுத்துச் செல்லப் படும் சமாதான நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏதும் ஏற்படாது மக்கள் ஒத்துழைப்புவழங்க வேண்டும் என்று சர்வமத சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மூதூர், வாழைச் சேனைப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் அமைதியைக் குழப்பும் இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாது தடுப்பதற்கு மக்களுக்கு இது ஒரு முன்னுதாரணம்என்றும்,

நிரந்தர சமாதானத்திற்காக பல்வேறு சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மக்களின் உணர்வு பூர்வநடவடிக்கைகளை அழிவுக்காக பயன்படுத்துவதை அரசியல் அமைப்புக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## நாட்டு மக்களுக்கு உரை

(கொழும்பு)

நிதி அமைச்சர் கே. என். சொக்ஸி இன்றிரவு 9.15 மணிக்கு நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றவுள்ளார்.

நாட்டின்தற்போதைய நிதி நெருக்கடி தொடர்பாகநிதியமைச்சர் கே. என். சொக்ஸி ரூபவாஹினிக் கூட்டுறவுத்தாபனம் மற்றும் தனியார் தொலைக்காட்சி மூலம் உரையாற்றவுள்ளார். (வ)

## பொதுக் கூட்டம

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சுகாதார தொண்டர்சங்கப்பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10.00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில்நடைபெறவுள்ளது. (உ-19)

# இந்தியஜனாதிபதிவேட்பாளர் கலாமின் உறவினர்கள் இலங்கையில்வாழ்கின்றனர்

(கொழும்பு)

இந்தியாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றதுடன் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமெனஇந்திய அணு விஞ்ஞானியும் ஜனாதிபதி வேட்பாளருமான அப்துல் கலாமிடம்,பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எம்.எம். அஸ்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த அமைச்சர் அஸ்வர் விஞ்ஞானிகலாமைச் சந்தித்துக் கலந்துரையாடிய வேளை இக்கோரிக்கையை விடுத்தார்.

இதேவேளை,தனது இலங்கையுடனான பூர்வீக உறவுகள் தொடர்பாக நினைவுகூர்ந்த கலாம் தனதுமாமனாரான இப்ராகிம் மனரக்காம் தற்போதும் அநுராதபுரத்தில் வசிப்பதாக குறிப்பிட்டார். (உ)

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோருக்கு, எதிர் வரும் 11,12, 13,14 ஆம் திகதிகளில் ஊக்குவிப்புப் பயிற்சி நடத்துதல் பொருட்டு சமுர்த்தி அதிகார சபையிலிருந்து பிரதிப்பணிப்பாளர்திருமதி எம்.வி.பந்துசேனா.உதவிப் பணிப்பாளர் எம்.நடேசராசா ஆகியோர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

மேற்படிஊக்குவிப்புப் பயிற்சிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம்,நல்லூர்,சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு யாழ்.செயலகத்திலும்,

12 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு யாழ்.செயலகத்திலும்,

13ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை, கரவெட்டிபிரதேசசெயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்குவடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும்,

14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில்,தெல்லிப்பளை பிரதேச செயலர்பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

மேற்படி பயிற்சி காலை 9 மணிமுதல்மாலை6மணிவரை இடம் பெறவுள்ளது. (உ-6)

# வை. கோ. கைது விடயத்தில் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது

## இல. கணேசன் கருத்து

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசியதற்காக ம. தி. மு. க. பொதுசெயலர் வை. கோ. மீது நடவடிக்கை எடுக்கும் விடயத்தில் தமிழக அரசு சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும். அவசரப்பட்டு எந்த நடவடிக்கையையும் எடுத்துவிடக் கூடாது என்று பாரதிய ஜனதாக்கட்சியின் மாநில பொது செயலாளர் இல. கணேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தூரதர்சன் தொலைக்காட்சிச் சேவைக்கு அளித்த பேட்டியில்;

போடோ சட்டத்தின்படி தடைசெய்யப்பட இயககத்திற்கு ஆதரவாக வை. கோ. பேசினாலும், அது குற்றமாகுமா என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் விடயத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் கருத்தும் ம. தி.முக வின்சருத்தும்மாறுபட்டிருப்பதால் கொள்கை ரீதியாக பா. ஜ. க. ஆதரவு தெரிவிக்கும்;

ம. தி. மு. க செயலாளர் வை. கோ. மீது போடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப் படுவதற்கான முன் முயற்சியை தமிழக அரசு மேற்கொள்ளப் போவதான செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

தேசிய ஜனநாயக கூட்டணிக்குள்ளேயே இருக்கும் கட்சிகள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பொதுவான தேசியத்திட்டத்திற்குட்பட்டு பணிபுரிகிறோம்.

அதற்கு அப்பால்பட்ட விடயங்களிலே கருத்து மாறுபாடு இருப்பது இயற்கை. அந்த வகையில் புலிகளைப் பொறுத்தவரையில் இன்றல்ல நேற்றல்ல பல்லாண்டுகாலமாக வை. கோ. பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து பொதுக் கூட்டங்களிலே பேசிவருகிறார்.

ஒருதடை செய்யப்பட்ட இயக்கம் குறித்து ஆதரவு தெரிவித்து பொதுக் கூட்டத்தில் பேசினாலே அதுசட்டப்படி குற்றமாகுமா என்பது குறித்து எனக்குத் தெரியாது.

இதை சட்ட வல்லுநர்கள் தான் முடிவு செய்யவேண்டும்.

புலிகள் விடயத்தில் எங்களுக்கும் ம. தி. மு. க. விற்கும் கொள்கை ரீதியாகவேறுபாடு இருப்பது உண்மை.

ஆனால், அவரின் பேச்சுகள் போடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட கூடிய அளவுக்கு தண்டனைக்குரிய குற்றமா என்பதை சட்ட வல்லுநர்கள் முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறான மாறுபட்ட கருத்துகள் நிலவும் போது தமிழக அரசு அவசரப்படக் கூடாது. சற்று நிதானம் காட்டவேண்டும். சட்டவல்லுநர்களை கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(உ-9)

### வத்திக்கானில் புகைபிடிக்கத்தடை

(ரோம்)

வத்திக்கானில்பொதுஇடங்களில் புகை பிடிக்கக் கூடாது எனும் சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

இச் சட்டத்தில் பரிசுத்த பாப்பரசர் கையொப்பமிட்டுள்ளார்.

பொது இடங்களில் புகை பிடிப்பவர்கள் உடனடியான முப்பது யூரோதண்டப்பணம் செலுத்த வேண்டும் என அச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## வட-கிழக்கில் மேலும் ஆறு ஆசிரியர் நிலையங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள ஆசிரியர் நிலையங்களுக்குமேலதிகமாக ஆறு ஆசிரியர் நிலையங்களை அமைக்க கல்வி, மனிதவள கலாசார அமைச்சு தீர்மானித்துள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸஸ்தீன் தெரிவித்துள்ளார்.

புதிய ஆசிரியர் நிலையங்கள் மன்னார் மாவட்டத்தில் உள்ளமடுகல்விவலயத்திலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம் தீவக வலயங்களிலும் வன்னிமாவட்டத்தில் வவுனியா வடக்கிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்புவலயத்திலும், கல்முனை மாவட்டத்தில் அக்கரைப்பற்று வலயத்திலும் இந்நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

(உ-3)

## பிரி.பிரஜையின் வாகனத்தில் இருந்து துப்பாக்கி குண்டு மீட்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்று திரும்பிய பிரித்தானிய பிரஜை ஒருவரின் வாகனத்தில் இருந்து நல்ல நிலையில் உள்ள துப்பாக்கிக் குண்டு ஒன்றை ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து படையினர் மீட்டுள்ளனர்.

இலங்கையில் பிறந்தவரான மேற்படி பிரித்தானிய நாட்டுப் பிரஜை, ஏ-9தரை வழிப் பாதையூடாக யாழ்ப்பாணம் வந்து சென்றவேளை கடந்த புதனன்று ஓமந்தைச் சாவடியில் அவரது வாகனத்தில் இருந்து துப்பாக்கிக் குண்டு மீட்கப்பட்டது.

இதனையடுத்து மேற்படி நபரும் அவரது வாகனச்சாரதியும் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது,

ஆனையிறவுப் பகுதியில் தேநீர் கடை ஒன்றிற்கு அருகில் என்னவென்று அறியாத நிலையில் கார்ச் சாரதி அதனை எடுத்து வந்ததாகத் தெரிவித்ததையடுத்து இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

(உ)

### பேருந்து விபத்து 7பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் கடந்த புதன் கிழமைஇடம்பெற்ற பேருந்து விபத்தினால், அதில் பயணம் செய்த 7 பேர் பலியாகியுள்ளனர். 22 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி பேருந்து பள்ளத்தினுள் பாய்ந்ததிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

(உ)

## ஈராக் மீதான தடையை ஐ. நா. நீக்க வேண்டும்

### தென்னாபிரிக்க பிரதி ஜனாதிபதி

(பக்தாத்)

ஐக்கிய நாடுகள்சபையானது ஈராக்மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கிவிடவேண்டுமென்று, தென்னாபிரிக்கா பிரதி ஜனாதிபதி ஜேக்கப்சுமா கோரியுள்ளார்;

ஈராக்கின் பிரதிப் பிரதம மந்திரி தாரிக் அணீலை கௌரவிக்கும் முகமாக தர்மானில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த 12 வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள பொருளாதாரத்தடை காரணமாக அங்குள்ள மக்கள் பெரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் எதிர் நோக்கி வருகின்றார்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-8)

## அமெ. சுதந்திர தினத்தன்று விமான நிலையத்தில் மூவர் சுட்டுக் கொலை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் சுதந்திர தினமாக கடந்த வியாழக்கிழமை லொஞ்ஏஞ்சல் சர்வதேச விமான நிலையத்தில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் 3பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் அமெரிக்காவில் உற்சாகமான சுதந்திர தினத்தை பாதித்திருக்கிறது.

விமான நிலைய ரிக்கெற் வழங்குவதற் கருகில் ஒரு நபர் திடீரென்று துப்பாக்கி பிரயோகம் செய்ததில் மேற்படி மூன்று பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை அந்தக் கொலையாளியை பாதுகாப்பு படையினர் உடனடியாக சுட்டுக் கொன்றுள்ளனர். இக் கொலையாளி எகிப்து நாட்டைச் சேர்ந்த 41 வயதுடையவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சென்ற ஆண்டு செப்-11 ஆந்திகதி நடைபெற்ற பயங்கர வாதத் தாக்குதலின் பின்னர் இடம் பெறும் சுதந்திர தினம் இதுவென்பதால் அமெரிக்க நகரங்களில் முக்கிய பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-9)

## ஜப்பான் நாட்டு அணுவாயுதக் கப்பல் பிரிட்டன் புறப்பட்டது

(தக்ஹாமா)

அணுவாயுதமூலப் பொருட்களை ஏற்றிக் கொண்டு சரக்குக் கப்பல் ஒன்று பலத்த பாதுகாப்புடன் பிரிட்டன் புறப்பட்டுள்ளது.

அணுவாயுத மூலப்பொருட்களாக புளுட்டோனியம் மற்றும் யுரேனியம் ஒக்ஸைட்டுகளின் கலவை இக்கப்பலில் எடுத்துச் செல்லப்படுவதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளைமேற்படி அணுவாயுத மூலப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்படலாம் அல்லது மூலப்பொருட்கள்கடலில் களவாடப்படலாம் என்று அமெரிக்க ராஜாங்க அலுவலகத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கப்பலில் அணுவாயுதப் பொருட்கள் ஏற்றிச் செல்வதை ஜப்பானில் உள்ள அணுப்பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இயக்கங்கள் கண்டித்துள்ளன.

(உ-3)

## அல்ஜீரிய சுதந்திர தினத்தன்று இருவேறு இடங்களில்குண்டுவெடிப்பு

(அல்ஜீரியர்ஸ்)

அல்ஜீரியாவின் 40 ஆவது சுதந்திரதினமான நேற்றுமுன்தினம் அங்கு இரண்டு பாரிய குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

மக்கள் செறிந்து காணப்படும் சந்தைப்பகுதியொன்றினுள் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் போது 35 பொதுமக்கள் பலியானதுடன், சுமார் 80 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

இக் குண்டு வெடித்து சிறிது நேரத்தின் பின்னர் தலைநகரை அண்டிய கடற்கரைப் பகுதியில் மற்றொரு குண்டும் வெடித்துள்ளது.

இந்த சம்பவத்தில் கடலில் நீராடச் சென்ற இருவர் படுகாயமடைந்த நிலையில் அல்ஜீரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக்குண்டு வெடிப்புச்சம்பவத்தில் இதுவரையும் எவரும் உரிமை கோரவில்லை.

இஸ்லாமிய போராளிகள் இந்த தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்றும் அல்ஜீரிய அரசு குற்றம் சாட்டியுள்ளது.

## ஒவ்வொரு..

றால் வீரம், இனத்தவர், சிநேகிதர், நல்ல பிள்ளைகள் புடைசூழ வாழ்தல். மூன்றில் கெட்டகிரகம் நின்றால் தொண்டை, காது வியாதி. சூரியன் நின்றால் நல்லது, வீரம், அஞ்சாநெஞ்சம். சந்திரன் நின்றால் மனைவி அழகி, கல்வி, பெண்சொல்கேட்டல். செவ்வாய் நின்றால் வீரம், பிரயாணத்தில் இடையூறு. புதன் நின்றால் மற்றவர்களுக்கு நன்மை செய்தல், கூரிய புத்தி படிப்பில் விருப்பு எடுத்தகாரியம் எப்படியும் முடித்தல், எல்லோராலும் மரியாதை. வியாழன் நின்றால்நல்லசகோதரர். ஞானப் போக்கு. வெள்ளி நின்றால் மூளைநல்லது, பணமில்லை. சங்கீதம்நாட்டியம் ஆகியவற்றில் விரும்பு. சனி நின்றால் வீரம்பணம், சகோதரரால்துக்கம்பலபேரைப் பாதுகாத்தல். இராகுநின்றால்வெளித்தோற்றத்துக்கு வீரம் உள்ளுக்குப் பயம் சகோதரருக்குக் கூடாது. கேது நின்றால் பலசாலிஆனால்,

பயம், திடமான மனமில்லை, பிதாவிலும் பிரபல்யம், நாலாதிபதி மூன்றில் நின்றால் சுகவீனம், நல்ல குணம், சிறிய தாய்பிள்ளைகளின் ஆய்க்கினை. ஐந்தாதிபதி மூன்றில் நின்றால் நல்ல சகோதரங்களும், பிள்ளைகளும், ஆறாதிபதி மூன்றில் நின்றால் சகோதரரால் கஷ்டம், ஏழாதிபதி மூன்றில் நின்றால்அழகிய களத்திரம், துக்கம்.

நாலாம் வீடு

இலக்கினாதிபதி நாலில் நின்றால் நற்குணம், குடும்பத்தில் சந்தோஷம், இரண்டாதிபதி நாலில் நின்றால் செலவு செய்வதில் கவனம், மூன்றாதிபதி நாலில் நின்றால் நல்வாழ்வு, சந்தோஷம், ஆனால் மனைவிகடூரமனம், கெட்ட குணமுடையவளாவாள், மூன்றாதிபதி நாலில் நாலாதிபதியுடன் நின்றால்இளையசகோதரங்கள் நல்லாயிருக்கும் நாலாதிபதி நாலில் நின்றால், பணம், சந்தோஷம், கடவுள் பக்தி, சூரியன் நின்றால் துக்கம் மனநிம்மதியின்மை கீர்த்திக்குறைவு, வாகனமின்மை, சந்திரன் நின்றால், நல்லவீடுகள், இனத்தவர்கள் மதிப்பு, பிரதானி பாவருடன் கூடில் தாய் சாதல். செவ்வாய் நின்றால் தாய் இனத்தவர் சகோதரருடன் சண்டை. வீடுஇருந்தாலும்பிரயோசனப்படாதிருத்தல், அந்நிய காலத்தில் செல்வம், புதன்நின்றால்நல்ல கல்விபேச்சுவன்மை, தகப்பன் நல்லாயிருப்பார். வியாழன் நின்றால், அரசினர் அன்பு, சந்தோஷம், அதிர்ஷ்டம்உண்டாகும், வெள்ளி நின்றால் பழக்கவழக்கம், சங்கீத வல்லமை தாயுடன் அன்பு, சனி நின்றால் சுகவீனம், தாய் சாதல் எல்லோராலும் இகழப்படல் இராகு நின்றால் கள்ளமனம் பேய்த்தனம், மற்றவர்களால் ஏய்படல். கேது நின்றால் பிறநாட்டுச்சீவியம் சந்தோஷமின்மை, தாய்இறத்தல், திடீர்மாற்றங்கள் ஐந்தாதிபதி நாலில் நின்றால் தாய் நெடுங்காலம் இருப்பார். பிள்ளைகள் குறைவுஒருமகன் விவசாயத்தில் ஈடுபடுவார். ஆறாதிபதி நாலில் நின்றால் இடிந்த வீட்டில் வாழ்தல், கல்விதடைப்படல், ஏழாதிபதி நாலில் நின்றால் சஞ்சலம், பிதாபகை.

(வளரும்)

## 'ஓர்மம்' அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

மகவம் நடத்தும், வேல் அமுதனின் 'ஓர்மம்' சிறுகதைத் தொகுப்பு நூல்அறிமுக விழாஇன்றுபி.ப3.30மணிக்கு இணுவில் தெற்கு பரராசசேகரப் பிள்ளையார் கோவில் மத்திய நூல் நிலையத்தில் ஆசிரியர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரைகளை பிரம்மஸ்ரீ வை.சோமாஸ் கந்தக்குருக்கள், யாழ். பல்கலைக்கழக பட்டப் படிப்புகள் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம், மகாவித்துவான் ந. வீரமணி ஐயர் ஆகியோரும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக வணிகபீடத் தலைவர் க. தேவராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

அறிமுகவுரைகளை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சபா ஜெயராசா, கலாநிதி க.குணராசா, கோகிலாமகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

(உ)

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தருஉம்பகை
குறள்

# வலம்புரி

## தளபதியின் ராஜினாமா

விமானப்படைத் தளபதி தனது பதவியைஇராஜினாமாச்செய்துள்ளார். அவர் ஓட்டிச் சென்ற வாகனம் லொறி ஒன்றுடன் மோதியதில்லொறிச் சாரதி மரணமடைந்ததும், அதனை மறைப்பதற்கு அவர் பொய்உரைத்ததும்காரணமாகபதவி விலகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தானே வாகனத்தை ஓட்டிச்சென்று லொறியுடன் மோதி விபத்தைஏற்படுத்திவிட்டு குற்றத்தை தனது வாகனச் சாரதியின்மீது சுமத்த முனைந்ததும்,உண்மை நிலையை அறிந்துகொண்ட பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன இராஜினாமாச் செய்யுமாறு விமானப்படைத் தளபதியை வற்புறுத்தியதும் தெரிந்ததே.

இதில் அதிசயம் என்னவெனில், வடக்குக் கிழக்கில்குறிப்பாக வன்னிப்பிரதேசத்தில் தமிழர் குடியிருப்புகள் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களை நடத்தி அப்பாவி மக்களைக் கொன்று சிங்கள அரசுகளின் செல்லப்பிள்ளையாகஇருந்த விமானப் படைத்தளபதி லொறிச் சாரதியின் மரணத்தில் மாட்டுப்பட்டு பதவியையே துறக்க நேரிட்டதாகும்.

ஒரு லொறிச்சாரதி விபத்தின் மூலம் மரணமடைந்தமைக்காக விமானப்படைத் தளபதிப் பதவியையே இராஜினாமாச் செய்ய வேண்டியுள்ளதாயின், விமானக் குண்டுத் தாக்குதல்களை தமிழர் குடிமனைகள்மீது நடத்தி குழந்தைகள் முதல்வயோதிபர் வரை கொன்றொழித்த குற்றத்திற்காக விமானப்படைத் தளபதிக்கு என்ன தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

லொறிச்சாரதி சிங்களவராக இருந்தமையால் பதவி விலகவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. மாறாக லொறிச் சாரதி தமிழராக இருந்திருந்தால், அவர் விமானப்படைத் தளபதியைக் கொல்வதற்காக வந்தார் எனக் குற்றஞ்சாட்டப்படுவதுடன்,அதனைவிசாரிப்பதற்கென தனிநபர் விசாரணைக்குழுவும் நியமிக்கப்பட்டிருக்கும்.

இதற்குமேலாக விமானப்படைத் தளபதிக்கு வேறு பதவிகளும், உயர்வுகளும் வழங்கப்பட்டிருக்கும். எதுவானாலும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்தரத்வத்தைக்கும் விமானப் படைத்தளபதி ஏயர்மார்ஷல் ஜயலத் வீரக்கொடிக்கும்விதிஒன்றாகிவிட்டது.

# கிறிஸ்துவிலே அத்திபாரம் இடப்பட்டவாழ்வு துன்பங்களால் அலைக்கழிக்கப்படமாட்டாது



## பரமபிதா காட்டிய பாதை

வாழ்க்கை என்பது சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாகும். அவ்வாறு வாழும் பொழுதே அவ் வாழ்க்கை சிறப்புடையதாகின்றது. சட்டம்,ஒழுங்குகள் சிறந்த நிர்வாகத்தை நடத்த ஏதுக்களாகின்றன. அவை பின்பற்றப்படாத விடத்து பொருளற்ற, பயனற்ற,கட்டுப்பாடற்ற ஒருவாழ்வு நிலை தொடர்கதையாகின்றது.இவ்விதமான நிலையானது உலகியல் வாழ்வுக்கும், ஆன்மீக வாழ்வுக்கும் பொருந்துகின்ற ஒன்றாகும். இங்கே கடைப்பிடித்தல் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. இலக்கை அடைவதற்கு வேண்டிய உத்திகளை அறியாமல் வெறுமனே போட்டிகளிலே கலந்து கொள்ளக் கூடாது.

### கிறிஸ்தவனின் வாழ்வுமுறை

திருமுழுக்கின் மூலம் கிறிஸ்தவர்களாகின்றவர்கள் கிறிஸ்து கூறிய வார்த்தைகளின் வழியில், அறிவுரைகளின் வழியே வாழவேண்டும் என்பதை தம்சீடர்களுக்கு கற்பிக்கின்றார் இயேசு. 'என்னைவிடத் தம் தாயிடமோ, தந்தையிடமோஅன்பு கொண்டுள்ளவர்கள் என்னுடையோர் எனக் கருதப் படத் தகுதியற்றவர்கள் (மத் 10:37) அவ்வாறே' தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றிவருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்,கிறிஸ்துவைப்போன்று கிறிஸ்தவனும் இறைவனுக்காக தம்முயிரையும் தியாகஞ் செய்பவர்களே இறைவனுக்கு உகந்தவர்கள்.

### கிறிஸ்தவனுக்கு ஏற்படும் சவால்கள்

வாழ்க்கை என்பது பஞ்சுமெத்தையல்ல,அது கற்களும், முட்களும், சமதரைகளும், பள்ளத்தாக்குகளும், மேடுகளும் நிறைந்ததே. அங்கே ஒரே விதமான தன்மையை எதிர்பார்க்க முடியாது. ஆனால் வாழ்வில் ஏற்படும் சவால்களைக் கண்டு பின்வாங்குபவன் வாழ்விலே நிதம், நிதம் இறந்து கொண்டே இருப்பான். எனவே எதிர்நீச்சல் போட்டு சவால்களை வெல்பவனே வெற்றியைக் கண்டடைவான்.அன்றாடம் வாழ்விலே ஏற்படும் நெருக்கீடுகளும், இயலாமை, இல்லாமைகளும், எதிர்ப்புகளும், குறுக்கீடுகளும் எம்மை கோழைகளாக மாற்றிவிடாமல் இறைதுணை கொண்டு நற்செய்தியின் ஒளியில் வாழும்போது நாம் வெற்றியை நோக்கி வீறுநடை போடலாம். இல்லையேல் எதிர்ப்புக்களைக் கண்டு பின்வாங்கி மிகவும் மோசமான நிலைக்கு நாம் தள்ளப் படுவோம்.எனவே எம் வாழ்வு கிறிஸ்துவிலே அத்திபாரம் இடப்பட்டவாழ்வாக இருக்கும் போது துன்பங்களால் அலைக்கழிக்கப்பட மாட்டோம்.

### இலட்சிய பயணம்

எமது இலட்சியப் பயணமானது விண்ணக வீட்டை நோக்கியதாக அமைய வேண்டும்.இடையில் ஏற்படும் குறுக்கீடுகள் எம்மை நிரந்தரமாகத் தாக்க முடியாது. விண்ணக மகிமையோடு ஒப்பிடும் போது தற்காலத்தில் நாம் படும் துன்பங்கள் அற்பமானவையே.புனித பவுல் கூறுவது போன்று முயற்சியுடன் இலக்கை நோக்கி ஓடும்போது அந்த வெற்றிவாகையை நாம் அடைய முடியும். உலகத்தின் செல்வத்தை நம்பியோ அதிலே அந்த நம்பிக்கை வைத்தோ நாம் நடக்க முற்பட்டால் எம் வாழ்வு நிலை வாழ்வுப் பயணப்பாதையை தொடராமல் அலைக்கழிக்கப்பட்ட வாழ்வாக மாறும் நிலைதோன்றும்.

எனவே கிறிஸ்தவர்கள் தம்மைத்தாமே திடப்படுத்தி தமது சாட்சிய வாழ்வின் மூலம் மற்றவர்களுக்கும் வழிகாட்டிகளாக முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும்.தமது தாலந்துகளைப் பயன்படுத்தி பரித்தியாகம் செய்பவர்களாக மாறவேண்டும். அயலவனிலே ஆண்டவரை காணவேண்டும். அவ்வாறான வாழ்வுக்கே நாம் அழைக்கப்பட்டவர்கள். உணர்ந்து செயற்பட உறுதி கொள்வோம்.

அமல அருள்தாசன்

# ஒவ்வொரு கிரகமும் தான் நிற்கின்ற வீட்டின் பலாபலன்களை எவ்வாறு வழங்குகின்றன?

## சோதிட பலன்

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருகிரகம் நிற்பதனால்ஏற்படும் பலன்களை அறிவோம்.

### முதலாம் வீடு

இலக்கினாதிபதி முதலாம் வீட்டில் நின்றால் பிரபல்யம். சூரியன் நின்றால், நேர்மையான மனமுங் குணமும் அதிகாரத்தில் விருப்பமும் உண்டாகும், சுக்கிரன், நின்றால் இலக்கினம் மகரம், கும்பமானால் நல்ல குணம் சங்கீதப் பிரியம், சந்திரன் நின்றால் நல்ல தோற்றம் பெண்களால் விரும்பப்படல், செவ்வாய் நின்றால், சூடான தேகம், வீரம் மனப்பலம், வீட்டு வாழ்வு, சந்தோஷமின்மை. புதன் நின்றால் கல்விமான், விகடப் பேச்சு, வியாழன் நின்றால் அழகான தேகம், அதிகப் பேச்சு, கெட்ட இரத்தம், நல்ல குணம். சனி நின்றால் பிறநாகரிகத்தை இலேசில் இச்சித்து நடத்தல், பலமற்ற தேகம், இராகு நின்றால் மருந்தால் மாற்றவியலாத வியாதி, மற்றவர்களுடன்வஞ்சகமாக நடத்தல், மணத்துக்கு நல்ல தல்ல. கேது நின்றால் பல மற்ற தேகம், சந்தோஷ மில்லாக் குடும்ப வாழ்வு, களவாய் நடத்தல், இரண்டாதிபதி இலக்கினத்தில்நின்றால்பணம்,இனத்தவருடன் பகை, மூன்றாதிபதி இலக்கினத்தில் நின்றால், பாடுபட்டுப் பணம் தேடல், சுகவீனம். நாலாதிபதி இலக்கினத்தில் நின்றால் நல்ல கல்வி, கூட்டங்களில் பேசப் பயம், ஐந்தாதிபதி இலக்கினத்தில் நின்றால், உயர் பதவி, பகைவருண்டு, மற்றவர்களுக்கு நன்மை செய்தல், பிள்ளைகள குறைவு, ஆறாதிபதி இலக்கினத்தில் பலமாய் நின்றால் பட்டாளத்தில் பெரிய பதவி, பலவீனமடைந்தால் கள்வருக்குத் தலைவன், புண்ணுண்டாம், ஆறாதிபதியுடன் மற்றுங் கிரகங்கள் இலக்கினத்தில் நின்றால் பலவிதமான வியாதி, ஏழாதிபதி இலக்கினத்தில் நின்றால் சிநேகம் அற்றவன், போகி.

### இரண்டாம் வீடு

இலக்கினாதிபதி இரண்டில் நின்றால், மரியாதை, நல்ல குணம் இலாபம். இரண்டாதிபதி இரண்டில் நின்றால் கர்வம், பிள்ளைகள் குறைவு, சூரியன் நின்றால் செல்வமில்லை, பல், கண் வியாதி, சந்திரன் நின்றால் பெருங்குடும்பம், சந்தோஷம். செவ்வாய் நின்றால் மற்றவர்களுடன் சண்டையிடுதல்,பணம், புதன் நின்றால்கல்வி, பணம், தருமம்

கணித வல்லமை, உண்மை பேசுதல். வியாழன் நின்றால் சோதிடர், புத்தகங்கள் எழுதுபவர். பேச்சாளர். வெள்ளி நின்றால் பெருங்குடும்பம், நல்லமனைவி,அழகியதேகம், தேகசுகம், பணம். இரண்டாமிடம் துலாம், மகரம். கும்பம் அல்லாவிடில் பாடுபட்டும் பலன் குறைவு. துக்கம், அலைச்சல் இராகு நின்றால் குடும்பச் சச்சரவு கண்வியாதி கேது நின்றால்கடன்,ஞானம்

மூன்றாதிபதி இரண்டில்நின்றால்சகோதரம்சாகும், கெட்ட குணம், மற்றவர் பெண்டிர்களை நேசித்தல். நாலாதிபதி இரண்டில் நின்றால் வீரம், சந்தோஷம், விகடப்பேச்சு. ஐந்தாதிபதி இரண்டில் நின்றால். அழகானமனைவி, நல்ல பிள்ளைகள், சோதிடத்தில் வல்லவர். ஆறாதிபதி இரண்டில் நின்றால் துக்கமான குடும்பவாழ்க்கை. ஏழாதிபதி இரண்டில் நின்றால் கெட்ட மனைவி ,மலடி.

### மூன்றாம் வீடு

இலக்கினாதிபதி மூன்றில் நின்றால் சகோதரர் உதவி, விவேகம்,புத்தி, சந்தோஷம். இரண்டாதிபதி மூன்றில்நின்றால் சங்கீதம், நாட்டியம் முதலியவற்றில் தேர்ச்சி வீரம், புத்தி, நல்லகுணம்' மூன்றாதிபதி மூன்றில் நின்

(6ம் பக்கம் பார்க்க)

செ. சோதிநாதன்

## தினசரி தியானம்

### மலை

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

-திருக்குறள்

மாண்பொருளே, மேலான எண்ணங்கள் மலை போன்று என்பால் வளர்ந்திருப்பனவாகுக.

மணல் ஒன்றோடொன்று ஒட்டி இறுகி மலையாகிறது. இயற்கையில் ஓயாது நிகழ்ந்து வரும் நிகழ்ச்சியின் பயன் இது. இங்ஙனம் எண்ணத்தின் தொகை மனிதன். எண்ணத்தை நல்லதாக்கி விட்டால் மனிதனும் நல்லவனாகிறான். மற்று, எண்ணத்தைக் கெடுத்துவிட்டால் மனிதன் தானே கெட்டவன் ஆகின்றான். விரைவில் ஒருவன் கெட்டுப் போய் விடலாம். ஆனால் நல்லவன் அதற்கோ மலையின் வளர்ச்சிபோன்று நெடுநாள் ஆகிறது.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான மாபெரும் பரிசுப்பொதி!

மெகா

முதற் பரிசு 4
அதி சொகுசு
வான்கள் 4

இரண்டாவது பரிசு 6
புத்தம் புதிய
கார்கள் 6

மூன்றாவது பரிசு 30
மோட்டார் சைக்கிள்கள் 30

ஆறுதல் பரிசுகள்
இரட்டைக் கதவு
குளிர்சாதனப் பெட்டிகள் 100

இவை மட்டுமல்ல
மேலும் பெறுமதியான பரிசுகள 2900

பிரதேசமட்டத்தில் காந்தா ரண் கினும் (மகளிர் பொற் கணக்கு) வைத்திருப்போருக்கு பெறுமதியான காஸ் அடுப்புகள் 300. மற்றும் ரண் கெகுளு கணக்கு வைத்திருக்கும் சின்னஞ் சிறுவருக்கு மவுண்டன் சைக்கிள்கள் 600. கிளைவாரியாக பெறுமதியான தங்கச் சங்கிலிகள் 2000.

பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்யவேண்டியது இவ்வளவே.
2002 ஓகஸ்ட் 01ம் தேதி முதல் டிசெம்பர் 31 வரை
இங்கு காட்டியுள்ள பரிசுக்காக நியமித்த கணக்குகளில் குறிக்கப்பட்ட குறைந்த நிலுவைத்தொகையைத்தொடர்ந்துவைத்திருப்பதுமட்டுமே.
மேலதிக விபரங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளிலும் பத்திரிகைகளிலும் கிடைக்கும்.

| பரிசுக்காக நியமித்த கணக்குகள் | ஆகக் குறைந்த நிலுவைத்தொகை |
| --- | --- |
| ரண் கெகுளு கணக்கு | ரூ. 5,000 |
| காந்தா ரண் கினும (மகளிர் பொற் கணக்கு) | ரூ. 5,000 |
| ரணவிரு கினும | ரூ. 10,000 |
| ரண்கொவி தன்பத் கினும | ரூ. 10,000 |
| நடைமுறைக் கணக்கு | ரூ. 10,000 |
| சாதாரண சேமிப்புக் கணக்கு | ரூ. 10,000 |
| சேமிப்புச் சான்றிதழ்கள் | ரூ. 10,000 |
| 18+இளைஞர் சேமிப்புக் கணக்கு | ரூ. 10,000 |

(காலப்பகுதி 1.8.02 - 31.12.02)

இலங்கை வங்கியோடு இணைந்தால்
தவறவே முடியாது - தோல்வியே கிடையாது

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்


# ஜனாதிபதியின் அதிகாரத்தை உடன் குறைக்க வேண்டும்

## விநாயகமூர்த்தி எம்.பி கோரிக்கை

(வவுனியா)

இந்தவருட முடிவுக்குள் மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை நாடு எதிர்நோக்கவேண்டிய சூழ் நிலையில் இருப்பதாக யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்

கரும்புலிகள் தின வைபவங்களில் கலந்து கொள்வதற்காக நேற்றுமுன்தினம் வவுனியா வந்த அ. விநாயகமூர்த்தி எம்.பி அங்கு கட்சி ஆதரவாளர்களை சந்தித்து நடத்திய கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்:

ஜனாதிபதி சந்திரிகா தனது அதிகாரத்தை பாவித்து இவ் வருடம் டிசம்பர் மாதம் 5ம் திகதி பாராளுமன்றத்தை கலைப்பதற்கு உத்தேசித்துள்ளார் என்று நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் அரசாங்கம் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூறினார்.

இக் கருத்தரங்கு காங்கிரஸின் வவுனியா கட்சித்லைவர் ஓ.கே.செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்றது. (வ)

**சமாதானத்தை...**

சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளனர்.

நீண்ட காலமாக நடைபெற்று வரும் யுத்தம் நாட்டை எந்தளவுக்குப் பாதித்துள்ளது என்பதை பிரதமரின் உரை உணர்த்தியுள்ளது. இந்நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதை விரும்பாத சிங்கள மக்களும், ஏனையோரும் இதனைப் புரிந்து கொண்டு அரசின் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய தருணம் வந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

**தென்மராட்சியில்...**

வருவதுடன் முகாம்களைச் சுற்றி முட்கம்பி வேலிகளைப் போட்டுள்ளதுடன் சாவகச்சேரி, சங்கத்தானை, கொடிகாமம்சந்தி, நுணாவில், கைதடி, நாவற்குழிப்பாலப் பகுதியிலும் பலமான காவலரண்களை அமைப்பதில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். (ம)

**எரிபொருளின்...**

தெரிவித்துள்ளன.

இதேவேளை அரிசி, சீனி, பருப்பு பால்மா வகைகளின் விலைகளையும் சி.டப்ளியூ.ஈ குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். அணி கோட்டை விட்டது

(சுண்டுக்குளி)

வடக்குக் கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளில, நேற்று துரையப்பா விளையாட்டு அரங்கில் நடந்த உதைபந்தாட்டப் போட்டிகளில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்ட அணிகள் வெற்றி பெற்றன.

நேற்றுக்காலை நடந்த திருகோணமலை யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கிடையில் நடந்த போட்டியில் 5:2என்ற கோல்க்கணக்கில் திருகோணமலை அணி வெற்றி பெற்றது.

இந்தப்போட்டிக்கு சண் தயாளன், ஏ.என். செபமாலைமுத்து, எஸ்.நவரட்ணராஜா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

முற்பகல் 10மணிக்கு கிளிநொச்சி, அம்பாறை அணிகளுக் கிடையில் நடந்த போட்டியில் 4:2என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி அணி தோற்றுப்போனது. இப்போட்டிக்கு அருளானந்தம் சோதி, தர்மேந்திரா, கதிர்காமராஜ் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

இதேவேளை நேற்று நடந்த இறுதிப்போட்டியில் மட்டக்களப்பு அணி முல்லைத்தீவு அணியை 2:0 என்ற கோல்க்கணக்கில் தோற்கடித்தது. இப்போட்டிக்கு ரி.ரெட்சன், சி.அரவிந்தன், ரி.மித்திரநாயகம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

இன்று நடைபெறும் போட்டிகளில் காலை 8.30மணிக்கு மன்னார் அணியை எதிர்த்து அம்பாறை அணியும் மாலை 3.45மணிக்கு மட்டக்களப்பு அணியை எதிர்த்து திருகோணமலை அணியும் மோதவுள்ளன. (இ.110)


# இலங்கை வங்கி முக்கிய அறிவித்தல்

தற்போது அச்சுவேலியில் இயங்கும் எமது **சாவகச்சேரிக் கிளை** வெகு விரைவில் சாவகச்சேரி நகரில் இயங்க ஆரம்பிக்கும் என்பதனை சகல வாடிக்கையாளருக்கும் அறியத்தருகிறோம்.

அதன் பின்னர் தற்போது சாவகச்சேரிக் கிளை இயங்கும் அதே கட்டிடத்தில் **சுன்னாகம்** வங்கியின் நீடித்த கருமபீடம் செயல்படும்.

தற்போதைய சாவகச்சேரிக் கிளை வாடிக்கையாளராக இருப்போர் விரும்பின் தத்தமது கணக்குகளை அதே இடத்தில் நடைமுறைப்படுத்தி வங்கிச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள் செய்யப்படும்.

ஆகவே தற்போது அச்சுவேலியில் இயங்கும் சாவகச்சேரிக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் எமது அச்சுவேலி வாடிக்கையாளர்கள் தாங்கள் எந்த இடத்தில் (அச்சுவேலி, சாவகச்சேரி) தங்கள் கணக்குகளைத் தொடர விரும்புகிறார்கள் என்பதனை உடனடியாக எழுத்து மூலம் வங்கி முகாமையாளருக்கு அறியத்தரவும்.

இவர்களைத் தவிர்ந்த ஏனைய வாடிக்கையாளரும் அச்சுவேலியில் தொடர்ந்து கணக்குகளை வைத்திருக்க விரும்பின் அதனையும் வங்கி முகாமையாளருக்கு அறியத்தரலாம்.

சகல வாடிக்கையாளருக்கும் திருப்திகரமான வங்கிச் சேவைகளை என்றும் இலங்கை வங்கி வழங்கும்.

பிரதேச முகாமையாளர்
இலங்கை வங்கி
யாழ்ப்பாணம்

என்றும் வாடிக்கையாளர் நலன் பேணும்

(C/4629)



## சென்றல் நர்சிங் ஹோம் யாழ்ப்பாணம்

10.07.2002 புதன்கிழமை முதல் சேவைகள் மேலும் விரிவாக்கப்படவுள்ளதுடன் சத்திரசிகிச்சை சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வழங்கப்படும் சேவைகள்:-

- வெளி நோயாளர் பகுதி.
- வாட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதி.
- சகல சத்திரசிகிச்சை, பெண் நோயியல்
- மகப்பேற்று சத்திர சிகிச்சை வசதிகள்
- நெபுலைசர் வசதி
- அல்ராசவுண் சிகிச்சை
- இன்(f)றா ரெட் லாம்ப் வசதி

**விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.**

பணிப்பாளர்,
350, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/4631)



## விசேட கழிவு

மொத்தமாக மஞ்சி பத்தி கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

| | |
| --- | --- |
| 1000 டசி மேல் | - 45.00 |
| 500 டசி மேல் | - 46.50 |
| 100 டசி மேல் | - 48.00 |

ஏக விநியோகஸ்தர்கள்
ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்
171, கே.கே.எஸ் றோட்
யாழ்ப்பாணம்.
T.P.NO - 021-3328

[5638]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.